## 6th Social Science Lesson 14 Notes in Tamil

## 14. இந்திய அரசமைப்புச் சட்டம்

**1. நமது அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?**

ஜனவரி 26, 1950

**2. இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?**

389 (1946).

**3. இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

முனைவர் ராஜேந்திரபிரசாத்

**4. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் யார்?**

அம்பேத்கார். (*ஆலோசகர் – பி.என்.ராவ்*)

**5. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு எது?**

டிசம்பர் 9, 1946

**6. 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?**

அண்ணல் அம்பேத்கர்

**7. எப்போது இச்சட்டம் எழுதி முடிக்கப்பட்டது?**

நவம்பர் 26, 1949 (2 ஆண்டுகள், 11 மாதம், 17 நாட்கள்)

**8. நமது அரசமைப்புச் சட்டம் எவற்றை வலியுறுத்துகிறது?**

ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்தல், மற்றும் சகோதரத்துவம்

**9. ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தை எவ்வாறு கூறுகிறோம்?**

இறையாண்மை

**10. இந்திய அரசு எதன் வழியே ஆளப்படுகிறது?**

சட்டமன்றம் (மாநில மற்றும் ஒன்றிய அரசுகள்)

**11. ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத் தேவையான உரிமைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

அடிப்படை உரிமைகள்

**12. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் இடம்பெற்றிருந்த வல்லுனர்கள் யாவர்?**

பி.ஆர்.அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம்.முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி.எல்.மிட்டர், என்.மாதவ ராவ், டி.டி.கே. டி.பி. கேதான்

**13. நமது அரசியல் சட்டம் உருவானபோது இடம்பெற்றிருந்த உறுப்புகள், பகுதிகள், அட்டவணைகளின் எண்ணிக்கை யாது?**

395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள்

(தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள்)

**14. அரசமைப்புச் சட்டம் எத்தனை முறை திருத்தப்பட்டுள்ளது?**

101 (16.09.2016 வரை)

**15. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் பேழையில் எந்த வாயு நிரப்பப்பட்டுள்ளது?**

ஹீலியம்

16. இந்தியா ஒரு **இறையாண்மையுடைய சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசு நாடாகும்.**

**17. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள் கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்.

**18. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவையெல்லாம் இடம்பெற்றுள்ளன?**

இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது , கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

**19. அரசமைப்புச் சட்டத்தின் ஆரம்பகட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட்டன?**

அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946- ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**20. இந்திய அரசமைப்புச் சட்ட அமைப்பில் இடம்பெற்றிருந்த பெண்கள் எத்தனை பேர்?**

15 பெண்கள்

**21. நாம் ஏன் குடியரசு தினம் கொண்டாடுகிறோம்?**

நமது அரசமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்.

**22. நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள்:**

1929 – ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக் (Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது.

**23. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எவ்வளவு செலவானது?**

64 லட்சம் **ரூபாய்**

**24. நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்ன?**

நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை , சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

**25. முகப்புரை என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது.

**26. இறையாண்மை என்பது எதைக் குறிக்கிறது?**

அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.

**27. மதச் சார்பின்மை என்றால் என்ன?**

மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும்சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது.

**28. இந்திய அரசு சட்டமன்றத்தின் வழியே ஆளப்படுகிறது, ஏன்?**

இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்.

**29. அடிப்படை உரிமை என்றால் என்ன?**

ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

**30. அடிப்படை உரிமைகள் யாவை?**

சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**31. வழிகாட்டு நெறிமுறை என்றால் என்ன?**

அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.

**32. ஓட்டுரிமை என்றால் என்ன?**

18 வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது.

**33. ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகள் யாவை?**

தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும்போது சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம்பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6 – 14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது.